முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 25.02.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 25.02.2026 | சாட்சி | பி. வா.சா. 2 |
| பெயர். | கிருஷ்ணமூர்த்தி | வயது.. | 73 |
| தந்தை பெயர். | சேப்பெருமாள் | கிராமம்.. | பெரியமேடு |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. நான் பெரியமேடில் வசிக்கிறேன். வழக்கு சொத்து பெரியமேட்டில் தான் இருக்கிறது. பி.வா.சா.ஆ.6 -ன் கிரய பத்திரம் பிச்சமுத்துவிடம் இருந்து அன்பழகன் வாங்கியது என்றால் சரிதான். பிச்சமுத்து சொத்துக்கள் வழக்கு சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. அன்பழகனிடமிருந்து 1/2 காணி சொத்து வாங்கினேன் செண்ட் கணக்கில் தெரியவில்லை. அதே சர்வே எண்ணில் பாலகிருஷ்ணனிடமிருந்து 38 செண்ட் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 கிரய பத்திரத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அதில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்.20/3A 30 செண்ட் அந்த சொத்துக்கள் வழக்கின் 6 வது இன சொத்துக்களுக்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அன்பழகனமிருந்து கிரயம் பெற்ற சர்வே எண்ணில் எவ்வளவு இடம் பயிர் செய்து வருகிறேன் என்று சொன்னால் 1/2 காணி. பத்திரத்தின் படி 30 செண்ட் தான் எனக்கு உரிமையானது மீதமுள்ள சொத்து வாதி குடும்பத்திற்க்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.